ஏறுதுபார் கொடி ஏறுதுபார்
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்தகொடி
எட்டுத்திக்கிலும் மானத்தைச் சேர்த்தகொடி
காலத்தை வென்றுமே நின்ற கொடி புலி
காட்டிய பாதையில் சென்ற கொடி

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது தமிழ்
மக்களைக்காத்த நம்மான மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது
புலி வீரத்தின் கொடியிது

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது தமிழ்
ஈழத்தின் கொடியிது புலி
ஏந்திய கொடியிது

சாதிகள் சண்டைகள் சாய்த்து விழுத்திய
சாதனை கொடியிது சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனை யாவிலும்
உலவிடும் கொடியிது சம
தர்மத்தின் கொடியிது எங்கள்
தாயவள் கொடியிது

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது
பிரபாகரன் என்றிடும் காவியநாயகன்
போற்றிடும் கொடியிது தமிழ்
தேசத்தின் கொடியிது எங்கள்
தேசிய கொடியிது